# பரலோகத்து உறவுக்காரன்

தேவனாக ஆராதிக்கப்பட
ஆசைப்பட்டான், ஒருவன்; அவன்
ஆராதனை தூதர்களின் முன்னால்
தலைவன்; தேவன் வாழுமிடம்
பரமண்டலங்கள், அவை சமாதானம்
நிறைந்த பரிசுத்த ஸ்தலங்கள்.

கலக எண்ணம் கொண்டவன், தன்
கடவுளாகும் ஆசை - பரிசுத்த
ஸ்தலங்களிலே நிறைவேறாது
என்றறிந்ததும் - தேவ பிள்ளைகளாய்
உதித்த, மனுஷனையும், மனுஷியையும்,
தேவ பர்வதமான ஏதேனிலே (பூமியில்)
சந்தித்தான்.

ஆதாம் (முதல் மனுஷன்) மாம்சத்தில்
தோன்றிய எல்லா உயிர்களுக்கும்
தலைவனும், அதிகாரியுமாக பரம
தந்தையால் அபிஷேகம் பெற்றவன்;
பறவை முதல் மிருகம் மற்றும் ஊரும்
அனைத்து பிராணிகளின் குணங்களை
படித்தவன், அறிந்தவன்.

இதை தெரிந்த, கடவுளாகும் ஆசை
கொண்டவன், ஆதாமின் துணைவியை
(முதல் மனுஷி) ஏமாற்றும் திட்டத்தை
அரங்கேற்றினான்.

அதனால் ஆலயமான சரீரங்களை,
அழியும் இச்சைகளுக்கு ஒப்புக்கொடுக்க
தூண்டினான்; அதனால் மாம்ச சிந்தை
தேவனின் பகையானது.

மனுஷராக படைக்கப்பட்டவர்களை,
தெய்வமாக மாறச் சொன்னவன்,
மிருகமாக இந்த உலகிற்கு வந்தவன்.

பாவம் (அநீதி) கீழ்ப்படியாமையின்
ரூபத்தில் வெளிப்படவே, ஆரம்பித்தான்
சத்துரு (கடவுளின் எதிரி), தனது பல மத
ஆராதனை கூத்துகளை, இந்த புனித
பூமியிலே.

அதனால் வேடிக்கையான பல
ஆராதனைகள், வேதனையான
வழிபாட்டு முறைகள், இன்று
நம்மிடையே தோன்றியுள்ளது; இது
குழம்பின குட்டையிலே மீன் பிடிக்கும்
முயற்சியே.

தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத்
தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும்
உண்மையோடும் அவரைத் தொழுது
கொள்ளவேண்டும் (யோவான் 4:24)

பரமண்டலங்களில் நன்மையாகப்
படைக்கப்பட்டவன் ஆராதனைத்-
தலைவன் - அவன் தீமையாக
உருவெடுத்ததால், நன்மை-தீமை கனியை
ஏதேனில் வைத்தார் இறைவன் - அதை
தேடும் நாளிலே, 'சாகவே சாவாய்' என்று
மனுஷனுக்கு தெளிவாய் உணர
வைத்தவர் பரமதந்தை.

முதல் குடும்பம் நன்மை-தீமையை
விரும்பி ஏற்றுக்கொள்ள, தேவன்
அவர்களுக்கு நித்தியஜீவனை
விலக்கினார்; சத்துரு செழித்திட,
மரணத்திலோ மனித உயிர்கள்.

இயேசுவின் குடும்ப ஊழியங்கள்

சகலத்திற்கும் அதிகாரியும், சர்வ
சிருஷ்டிக்கும் எஜமானருமான பரம பிதா,
அநீதியை அகற்றிட - தம் அன்பிலே
தோன்றினார், இயேசுவாய் உலகிலே.

'இருப்பவராகவே இருக்கின்றவர்',
மனிதன் பாவமாக இருப்பதால்
(அநீதியில் ஜீவிப்பதால்) - அவர்களை
தம்மைப்போல் பரிசுத்தமாக்க
(நீதிமான்களாய் மாற்ற) - தம் ஒரே
பேரான குமாரனை (தேவ
வார்த்தையானவரை), பாவிகளுக்காய்
பாவமாக்கினார்.

தேவனால் உருவாக்கப்பட்ட ஒருவனால் -
மரணம் பூமிக்கு வந்ததால் - நீதியில்
பிரியமுள்ள தேவன், தம்முடைய
ஜீவனைத்தந்து (குமாரனை), அந்த
மரணத்தை ஜெயமாக விழுங்கினார்.

தேவ நீதியின்படி, பாவமில்லாத
பரிசுத்தரின் இரத்தம் எல்லா
பாவிகளுக்கும் மொத்த கிரயமாக
ஒரேதரம் கொல்கதாவிலே
சிந்தப்பட்டுள்ளது.

அதனால் மாம்சத்திலே வந்த தேவனுக்கு
(இயேசுவுக்கு), இவ்வுலகத்துடன் இரத்த
சம்மந்தமான உறவு ஏற்பட்டது; இந்த
இரத்தித்திலே கழுவப்பட்ட, அத்தனை
ஆத்துமாக்களும், அவரது பிள்ளை-
களாகிறார்கள்.

இதுவே தேவ திட்டம்; விசுவாசத்திலே
உருவான சட்டம்.

ஆத்துமா பரலோகத்து விதையாக- மனித
இருதயத்தில் விதைக்கப்பட்டுள்ளது;
நற்பண்புகளைப் பூக்கும் கனியாக - அது
உருவாக தேவ கிருபையானது-
சிலுவையிலே இலவசமாக
அளிக்கப்பட்டுள்ளது.

அசுத்தமான இருதயம் சுத்தமடைய,
இயேசுவின் இரத்தமே மருந்தாகும் - இது
எப்படியாகும்? விசுவாசத்திலாகும்;
இயேசுவை தேவனுடைய சுதனென்று,
அறிக்கை செய்வதே விசுவாசமாகும் -
மற்ற பக்தி வைராக்கியமெல்லாம் -
பொய்யான ஏமாற்றமாகும்.

இயேசுவை விசுவாசிப்பவன்,
அவரைப்போல தியாக உள்ளத்தோடு
வாழ்பவன்; முழுமனதுடன் அவரது
சத்தியப்பாதையை பின்பற்றுபவன்;
அவன் பரலோகத்து உறவுக்காரன்.

ஆமாம், பூமியிலே மரித்தவர் - என்றும்
நித்திய ஜீவனில் பரலோகத்திலே
வாழ்கின்றவர், இயேசு ஒருவரே.

இந்த தெய்வத்தை பின்பற்றாதவன் -
சியோனை மோட்சம் என்று விசுவாசிக்க,
மறுப்பவன்; அவிவிசுவாசமானவன்,
அந்தகாரத்தில் நடப்பவன்- பாதாளத்து
சொர்க்கத்தின் சொந்தக்காரன்.

ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத்தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது - யோவான் 3:19

இயேசுவின் குடும்பம் ஊழியங்கள்